**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூலை - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, July - 2019**

FWC

| தரம் :- 12 (2020) | கிறிஸ்தவம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 6) 1 | 11) 3 | 16) 4 |
| 2) 3 | 7) 5 | 12) 4 | 17) 1 |
| 3) 4 | 8) 3 | 13) 1 | 18) 5 |
| 4) 1 | 9) 2 | 14) 5 | 19) 3 |
| 5) 5 | 10) 4 | 15) 2 | 20) 2 |

## பகுதி II

1) 1. பர்ணபா, யோவான் மாற்கு

2. 1. லிதியாவின் மனமாற்றம் தி.ப 16 : 13 – 15
   2. மந்திரம் கூறும் பணிப்பெண்ணிடமிருந்து அசுத்த ஆவியை விரட்டுதல். (தி.ப 16 : 16 – 22)
   3. பவுலும் சீலாவும் சிறையில் இடப்படல். (தி.ப 16 : 23 – 34)
   4. பவுலும் சீலாவும் விடுதலை செய்யப்படல். (தி.ப 16 : 35 – 40)

3. 1. கிறிஸ்து திருச்சபையை அன்பு செய்தது போல் கணவரும் தன் மனைவியை அன்பு செய்தல் வேண்டும்.
   2. கிறிஸ்து திருச்சபைக்கு தலையாக இருப்பது போல கணவன் மனைவிக்கு தலையாக இருக்க வேண்டும்.
   3. திருச்சபை கிறிஸ்துவுக்கு பணிந்திருப்பது போல மனைவி கணவனுக்கு பணிந்திருக்க வேண்டும். (ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி பக்கம் 161 ஐப் பார்க்கவும்)

4. 1. கீழ்ப்படிவு மிகவும் உயர்ந்த பண்பு ஆகும்.
   2. மானிட உரு எடுத்த இறைமகன் கீழ்ப்படிதலின் பிரதி விம்பம்.
   3. இறைவனின் திட்டத்திற்கு தலைசாய்த்த யேசு மரணத்திற்கு மட்டுமல்ல நிந்தனைக்குரிய சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்கு கீழ்ப்படிந்தார்.
   4. கீழ்ப்படிவினால் அவரிடத்தில் தெய்வீகத் தன்மை வெளிப்படுத்தப்பட்டது.
   (மாணவர் அனுபவத்தோடு இவ்விடயங்கள் உள்ளடக்கி எழுதி இருப்பின் புள்ளி வழங்கவும்)

2) 1. ஏழைகள், வரிதண்டுபவர்கள் அல்லது சுங்க ஆயக்காரர்கள், பெண்கள், அடிமைகள், இடையர்கள், தொழிலாளர் ஒடுக்கப்பட்டோர்.

2. பெண்கள் :
   - ஆணாதிக்கம் நிலவிய யூத சமூகத்தில் பெண்களுக்கு உரிய சமூக உரிமைகள் இல்லாதிருந்தது.
   - பெண்கள் ஆணாதிக்கத்திற்கு அடிமையானதோடு கல்வி மற்றும் தொழிற்துறைகளுக்கும் உரிமையற்றவர்களாயிருந்தனர்.
   - சமய விடயங்களிலும் புறக்கணிக்கப்பட்டவர்களாக இருந்தனர்.
   - ஆண்களைப் போன்ற சம உரிமை இருக்க வில்லை.

agaram.lk

- பெண்கள் விதவைகளான போது மிகவும் கேவலமான நிலைக்கு தள்ளப்பட்டனர்.
- விதவைகள் சமூகத்தில் துன்பப்பட்டவர்களாக இருந்தனர்.

3. ◆ ஆரம்ப கிறிஸ்தவ சபைக்குள் விதவைகளைக் கவனிப்பதற்கான முறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. தி.ப 6 : 1 – 6.
   ◆ திருத்தொண்டர் தெரிவு செய்யப்பட்டமை
   ◆ திருத்தொண்டர்களாக பெண்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

4. • கைவிடப்பட்ட பெண்கள், விதவைகளுக்கு சுயதொழில் வாய்ப்பை பெற உதவி செய்தல்.
   • அவர்களையும் எமது சகோதரர் என்ற உணர்வுடன் நேசித்தல்.
   • அடிமைகளின் வாழ்வில் மாற்றத்தைக் கொண்டுவர யேசு சீடர்களின் பாதங்களை கழுவி ஒருவருக்கிடையே தாழ்மையை மேலோங்கச் செய்து தலைவர் பணியாளரைப் போன்றிருக்க வேண்டும் எனக் கற்பித்தது போல் எமக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் இன்றி செயற்படல்.
   • நோயாளிகள் சாபத்துக்குரியவர்கள் என்று அவர்களை ஒதுக்கி வைக்காமல், அவர்களை பழித்துரைக்காமல் யேசு நோயாளிகளைத் தொட்டு குணப்படுத்தியது போல் நாமும் அவர்களுக்காக செபித்தல் வேண்டும்.
   • சக்கேயு, மத்தேயுவை வரிதண்டுபவர்களாக இருந்த போது அவர்களை யூதமக்கள் இனத்துரோகிகளாக கருதினர். ஆனால் யேசுவோ அவர்களை ஏற்றுக் கொண்டு செயற்பட்டதன் மூலம் அவர் அவர்களை சரியான பண்புள்ள வழிக்கு கொண்டு வந்தார். அதேபோல் இன்று எம் மத்தியில் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோரை மனமாற்றம் அடையச் செய்து கிறிஸ்தவ வாழ்வுக்கு அழைத்துச் செல்லல்.

3) 1. எழுத்து வடிவம் பெற்ற பெரிய இறைவாக்கினர் - எசாயா, எரேமியா, எசேக்கியேல்
   எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர் - எலியா, எலிசா, நாத்தான், குல்தா, அபியா

2. சாமுவேல், அரசர்கள்

3. தியானத்தில் ஈடுபடல், குழுவாக செயற்படல், தமது தூதுப் பணிக்குச் சான்றாக அருங்குறிகள் புரிதல்.

4. தூய ஆவியின் வழிநடத்தலைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
   சவால்களை பொறுமையுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.
   சமூகத்தில் காணப்படும் அநீதிகள், சீர்கேடுகளுக்காக குரல் கொடுக்க வேண்டும்.
   உண்மைக்க சான்று பகர வேண்டும்.
   துன்பத்தைக் கண்டு மனந்தளராமல் இறைநம்பிக்கையில் வளர வேண்டும்.
   இறைவனின் நாவாக செயற்பட வேண்டும்.
   இறைவார்த்தையை துணிவுடன் எடுத்துரைக்க வேண்டும்

## பகுதி – II

4) 1. ◆ யூதர்கள் பவுலை ஏற்க மறுத்தமை.
   ◆ சிறையில் அடைக்கப்பட்டார்.
   ◆ பயணங்களின் போது அவருக்கு தடங்கல்கள் ஏற்பட்டமை.
   ◆ நகரங்களுக்கு வெளியே இழுத்துச் செல்லப்பட்டமை.
   ◆ தீய ஆவி பிடித்தவர்களைக் குணமாக்கும் போது ஏற்பட்ட சவால்கள்.
   ◆ கலகக் காரர்கள் என குற்றம் சாட்டப்பட்டமை.
   இதுபோன்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு விடையளித்திருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

agaram.lk

2. • தைரியத்தோடு நற்செய்தியை அறிவிக்க எம்மை அர்ப்பணித்தல்.
   - நற்செய்தியைப் பரப்புவதற்காகப் பின்வாங்காது வீரத்தோடு செயலாற்ற எமது ஆற்றல்களை முழுமையாகப் பயன்படுத்துதல்.
   - எப்பொழுதும் இறை விருப்பத்தை தேடுதல்.
   - இறைவனுக்குரிய கௌரவத்தைப் பின்வாங்காது அவருக்கே ஒப்புக் கொடுத்தல்.
   - நற்செய்திக்காகத் துன்ப வேதனைகளை அனுபவிக்க நேர்ந்தாலும் அவற்றுக்குத் தைரியமாக முகம் கொடுத்தல்.
   - உலக காரியங்களுக்கு அடிமையாகாமல் ஆன்மீக காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
   - நலிவடைந்தோருக்கு உதவி செய்ய அர்ப்பணித்தல்.
   - எப்பொழுதும் செபத்தில் நிலைத்திருத்தல்.
   - எப்பொழுதும், எச்சூழ்நிலையிலும் இறைவனைப் புகழ்வதற்கும் ஆராதிப்பதற்கும் முன்மாதிரியாக வாழ்தல்.

5) 1. சமயச் சட்டங்கள்
   - யூத மக்கள் அன்றாட சமய சட்டங்களைக் கடைப்பிடிப்பதில் அதிக கவனம் செலுத்தினர்.
   - தாம் செய்ய வேண்டியவை, செய்யத் தகாதவை அனைத்தையும் பற்றிய அடிப்படையான விடயங்கள் சட்டமுறைமைக்குள்ளடக்கப்பட்டன என நம்பி வாழ்ந்தனர்.
   - சட்டத்தைக் கடைப்பிடித்தல் சட்டத்திற்கு கீழ்ப்படிதல்.

2. • ஓய்வு நாளை கடைப்பிடிப்பது சிறப்பானது எனக் கருதாது ஓய்வு நாளில் ஆன்மீக காரியங்களில் பங்கெடுக்க வேண்டும்.
   - சட்டத்தைக் கடைப்பிடித்தல், சட்டத்திற்கு கீழ்ப்படிதல் மூலம் தூய்மையான வாழ்வு வாழலாம் என நம்புவது.
   - சட்டத்துக்காக மனிதன் அல்ல, மனிதனுக்காகத் தான் சட்டம் எனவே சட்டத்தை விட மனிதனுக்கே முதலிடம் கொடுக்க வேண்டும்.
   - யேசு சட்டத்தை விட மனிதத் தன்மையை மதித்து நடந்தார்.

agaram.lk

6) 1. 1. காயீன் ஆபேல், நோவா பெருவெள்ளம் பாபேல் கோபுரக்கதை இவற்றுள் இரண்டினை விளக்கி இருப்பின் புள்ளி வழங்கவும்.

2. இறைவனை தேடுவதற்கான நேரங்கள் காலங்களை ஒதுக்காமல் உலக காரீயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
   - பெற்றோர், சகோதரர்களுக்கிடையில் அன்புறவு இன்மை.
   - நுகர்வு கலாச்சார மோகங்கள்.
   - கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற சமூக சீர்கேடுகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டமை.
   - பணம், பதவி, செல்வங்களுக்கு முக்கியம் கொடுக்கப்பட்டமை.
   - குடும்பம், சமூகம், நாட்டிற்கிடையே ஒற்றுமை இன்மை.
   - போட்டி மனப்பான்மை மூலம் இறைவன் விரும்புகின்ற தூய்மையான வாழ்க்கையை நடாத்த முடியும் என்பது இவர்களின் நம்பிக்கையாக இருந்தது.
   - ஓய்வு நாள் அனுசரிப்பதில் அதிக கவனம் செலுத்தினர்.
   - ஓய்வு நாளில் இவ்வுலகைச் சார்ந்த விடயங்களைத் தவிர்ப்பதோடு ஆன்மீக வழிபாடுகளை நிறைவேற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.
   - ஓய்வு நாளில் நற்காரியங்களை நிறைவேற்றுவதை விடச் சட்டத்திற்கு முதலிடம் கொடுத்தனர்.

சமயச் சடங்குகள்.

- இறை ஆராதனைக்கு முன் கைகால்களைக் கழுவி சுத்தமாகுதல் முக்கியமான ஒரு சடங்கு.
- தலைப்பேறான ஆண் குழந்தைகளை அர்ப்பணித்தல், விருத்த சேதனம் செய்தல் போன்றன கோவிலுக்குள் நிறைவேற்றப்பட்ட சமயச் சடங்குகளாகும்.

- 12 வயதான ஆண் பிள்ளையை கோவிலுக்கு கொண்டு வந்து குரு முன்னிலையில் சட்டத்தின் மக்களாக்குதல் யூதப்பழக்கம்.
- யூத ஆண்பிள்ளைகள் கோவிலுக்கோ அல்லது தொழுகைக் கூடத்துக்கோ சென்று சட்டங்களை கற்றல் அடிப்படைத் தேவை.
- மோசேயின் சட்டங்களைக் கடைப்பிடித்தல் யூத இனத்திற்கு கட்டாயமாக இருந்தது.
- சட்டங்கள் பற்றிய அடிப்படைக் காரணங்களை மறைநூல் அறிஞர்கள் கற்றக் கொடுத்தனர்.

2. • சட்டங்களுக்கு கட்டுப்பட வேண்டுமே தவிர சட்டம் தான் எமது வாழ்வு என்று வாழ முடியாது,
   • திருமுழுக்கின் வழியாக இறை பிள்ளையான நாம் செய்ய வேண்டியவை, செய்யத் தகாதவைகள் எவை எனப் போதிக்கின்றதே தவிர இவற்றைக் கடைப்பிடிப்பதனால் மீட்பு கிடைக்கும் என ஏற்றுக் கொள்ளக்கூடாது.

agaram.lk